# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0569 / 2016/ ந
ஆணை எண்: 01 80 / 201 6
நாள்: 03 /12 /2016

சாலையோர சிறு வியாபாரிகள்,
நகர பொது மக்கள்,
எடப்பாடி நகராட்சி.
—மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
எடப்பாடி நகராட்சி.
—எதிர் மனுதாரர்

## ஆணை

15.06.2016 அன்று எடப்பாடி நகராட்சி சாலையோர சிறு வியாபாரிகள், நகரபொதுமக்கள் என அனுப்புநர் முகவரியிடப்பட்ட மின்னஞ்சலில் மனு ஒன்று முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. இம்மனு எண் 0569/2016 ஆகப் பதிவு செய்யப்பட்டது. இம்மனுவில் எடப்பாடி நகராட்சிக்குச் சொந்தமான கடைகளுக்கு முறையாக வாடகை நிர்ணயம் செய்யப்பட வில்லையெனவும் குறைவான தொகையே நிர்ணயிக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில், விதி 4ன் படி முறை மன்ற நடுவச் செயலரிடம் நேரில் அல்லது பதிவு அஞ்சலில், முறை மன்ற நடுவருக்கு முறையீட்டினை எழுத்தில் உரிய படிவத்தில் (படிவம் 1), கோரப்பட்டுள்ள விவரங்களுடன் ரூபாய் பத்துக்கான நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடன் (Court Fee Stamp) தாக்கல் செய்யுமாறு இம் முறை மன்ற நடுவம் 20.06.2016 நாளிட்ட அறிவிப்பாணைமூலம் புகார் மனு வரப்பெற்ற அதே மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நாளது வரை அவ்வாறு விதிகளின்படி முறையீட்டுமனு முறையாகவும் முழுமையாகவும் வரப்பெறவில்லை.

இருப்பினும் இம்முறை மன்ற நடுவத்தில் ஆணையிடப்பட்டவாறு, சேலம் மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது ஆய்வறிக்கை ( ந.க.எண் 2019/16/ அ.நி நாள் 23.11.2016) வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. இவ்வறிக்கையில் அரசாணைகளின்படியும் நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும் முறையாக நகராட்சிக் கடைகளுக்கான குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளதெனவும் இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் தொடர்பான ஆவண நகல்கள் மற்றும் புகைப்படங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, இம்முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கையினை கைவிடலாமெனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஓம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

9/12/2016

செயலாளர்

9.12.16

9.12.16

பெறுநர்

1. சாலையோர வியாபாரிகள்
   மற்றும் பொது மக்கள்,
   எடப்பாடி நகர பகுதி,
   சேலம் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   எடப்பாடி நகராட்சி,
   சேலம் மாவட்டம்–637101.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   கிருஷ்ணராஜேந்திதிர சத்திரம்,
   அரிசிபாளையம், சேலம்–639 009.